ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி : 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | பொதுப் படுகடன் திணைக்களம் மற்றும் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் |
| திகதி | 2020.04.24 |

## யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பிஎல்சி இனால் முதனிலை வணிகருக்கான உரிமத்தினை மீளப்பெறல்

யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பிஎல்சி இனால் வேண்டுகோள் விடுக்கப்பட்டதனை கருத்திற்கொண்டு, இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது 2020 மே 01 இலிருந்து யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பிஎல்சி முதனிலை வணிகராக செயற்படுவதனை நிறுத்துவதற்கு அனுமதியளித்திருக்கின்றதென்பதை பொதுமக்களுக்கு இத்தால் அறிவித்திருக்கின்றது. யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பிஎல்சியானது லங்கா தீர்ப்பனவு முறைமையில் நேரடி வணிக பங்குபற்றுநராக தொடர்ந்து தொழிற்படும் என்பதுடன் தனது வாடிக்கையாளர் சார்பாக பத்திரங்களற்ற அரச பிணையங்களின் கொடுக்கல்வாங்கலில் ஈடுபட்டு லங்கா செக்குயர் முறைமையில் வாடிக்கையாளர் கணக்குகளையும் பராமரிக்கும்.

யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பிஎல்சியின் வியாபர தீர்மானத்தின் அடிப்படையில் மட்டுமே இவ்வனுமதி வழங்கப்பட்டிருப்பதுடன் யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பிஎல்சி உரிமம்பெற்ற வணிக வங்கியாக அதனுடைய செயற்பாடுகள்/ சேவையினை இது எந்தவிதத்திலும் பாதிக்காது என்பதனை இலங்கை மத்திய வங்கி வலியுறுத்த விரும்புகின்றது.